இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 123 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 27 – சனிக்கிழமை 13 டிசம்பர் 2025 – சென்னை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 123 : Thiruvalluvar Year - 2056 - Karthigai 27 - Saturday 13 December 2025 - Chennai 20 Pages ₹ 5.00

## ரூ.1000 வழங்குவது தொடக்கம் மட்டும்தான்:

# ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ நிச்சயம் உயர்த்தப்படும்!

## ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, டிச.13–**

**தமிழ்நாட்டில் இனி 1 கோடியே 30 லட்சத்து 69 ஆயிரத்து 831 மகளிர்க்கு மாதா மாதம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் ரூ. 1000 வழங்கப்படும்; இந்த ஆயிரம் ரூபாய் என்பது தொடக்கம்தான், நிச்சயம் உரிமைத் தொகை உயரும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “வெல்லும் தமிழ்ப் பெண்கள் சாதனை விழாவில் இத்திட்டத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தமிழ்நாட்டின் சாதனைப் பெண்களின் வெற்றிக் கொண்டாட்டம் விழாவில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் இரண்டாவது கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்து, ஆற்றிய உரை வருமாறு:




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2025) சென்னை, நேரு உள்விளையாட்டரங்கத்தில், தமிழ்நாடு அரசு பெண்களுக்காக செயல்படுத்தும் பல்வேறு முன்னோடி திட்டங்களின் சாதனைகள், பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொண்ட முன்னெடுப்புகளை எடுத்துக்காட்டும் ”வெல்லும் தமிழ்ப் பெண்கள் தமிழ்நாட்டின் சாதனை பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் நிகழ்ச்சியில், 16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 மகளிர் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2–ஆம் கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், சமூக சேவகி பத்மபூஷன் திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், செல்வி துளசிமதி முருகேசன் மற்றும் மேயர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நான் இந்த நிகழ்ச்சிக்கு வந்து மூன்று மணிநேரம் ஆகியிருக்கிறது. இங்கே பேசிய எல்லோருடைய பேச்சை கேட்டேன் என்று சொல்வதைவிட, நெஞ்சை உருக்குகின்ற, தன்னம்பிக்கையையும், புது நம்பிக்கையையும் கொடுக்கும் உங்களின் கதைகளை, பேச்சை கேட்டு, மகிழ்ச்சியில் என்று சொல்வதை விட, நெகிழ்ச்சியில் இருந்தேன் என்று தான் சொல்ல வேண்டும்! உள்ளத்திலிருந்து பேசிய உங்களுக்கும் - உற்சாகமாக கைத்தட்டல்களை வழங்கிய சகோதரிகள் அனைவருக்கும் என்னுடைய நன்றி! நன்றி! நன்றி!

என்னுடைய நன்றி என்பது, இந்தக் கடமையை சிறப்பாக, இன்னும் சிறப்பாக ஆற்ற வேண்டும் என்ற உணர்வின் வெளிப்பாடு! இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக இரண்டு பேரை அழைத்திருந்தோம். ஒருவர் மரியாதைக்குரிய அம்மா கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்கள்; தன்னுடைய 100 வயதில் நிறைவாழ்க்கை வாழ்ந்து, பொது வாழ்க்கையில் வெற்றி பெற்றவர். மிகவும் பொருத்தமானவர்;

மற்றொருவர் இளம் வெற்றியாளர் சகோதரி துளசிமதி முருகேசன் அவர்கள். எவ்வளவு சிறப்பாக பேசினார்கள். விளையாட்டுத் துறையில் மட்டுமல்ல; அரசியல் துறைக்கும் வந்தாலும், இவர்கள் தான் நம்பர்–1–ஆக இருப்பார்கள்.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## “2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவரே மீண்டும் முதலமைச்சர் ஆவார்; ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடரும்!” எனும்

# வெற்றிச் செய்திக்கு அடித்தளமாக - வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு அமையும்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, டிச. 13-**

**திருவண்ணாமலையில், நாளை (டிச.14) நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பையொட்டி, இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், “வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவரே மீண்டும் முதலமைச்சர் ஆவார், திராவிட மாடல் ஆட்சி தொடரும் என்னும் வெற்றிச் செய்திக்கு அடித்தளமாக இந்த ‘இளைஞர் அணி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு’ அமையும் என்பது உறுதி” என்று குறிப்பிட்டுள்ளார்.**

துணை முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

வணக்கம். 75 ஆண்டுகளைக் கடந்து, தமிழர்களின் மேம்பாட்டை முன்னிறுத்தி தன் அரசியல் பயணத்தை மேற்கொள்ளும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எப்போதும் பக்கபலமாக இருப்பது, கழக இளைஞர் அணி.

1980இல் இன்றைய கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட கழக இளைஞர் அணி, கழகத்துக்கு வலிமை சேர்த்து, களத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இன்று தமிழ்நாடு முழுவதும் தலைமைக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எனக் கணிசமான கழகச் செயல்வீரர்கள் இளைஞர் அணிப் பாசறையில் பட்டை தீட்டப்பட்டவர்களே!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைகளைத் திசையெங்கும் கொண்டு செல்லும் கருத்தியல் பணிகள் ஒருபுறம், கட்டமைப்பை வலுப்படுத்தி கழகத்தின் வெற்றிகளுக்குத் துணைநிற்கும் அரசியல் பணிகள் இன்னொரு புறம் என்று இடைவிடாது இயங்கிக்கொண்டிருக்கிறது இளைஞர் அணி.

திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், சட்டமன்றத் தொகுதிதோறும் கலைஞர்



நூலகம், திராவிட இயக்க வரலாற்றுச் சுவடுகளைப் பதியும் ‘முரசொலி பாசறைப் பக்கம்’, வரலாற்றை நினைவுகூர்ந்து வாசிப்பை விரிவு செய்யும் ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’, திசையெங்கும் திராவிடத்தைக் கொண்டுசேர்க்கும் 200க்கும் மேற்பட்ட இளம் பேச்சாளர்கள், கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், 75 ஆண்டுக்கால தி.மு.க வரலாற்றுப் பங்களிப்புகளை 1,120 பக்கங்களில் விவரிக்கும் ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூல், சமீபத்தில் தமிழ்நாடே கொண்டாடிய ‘அறிவுத் திருவிழா’ என்று இளைஞர் அணி தொடர்ந்து கருத்தியல் பணிகளை ஆற்றி வருகிறது.

### புதிய முன்னெடுப்புகள்!

இன்னொரு புறம் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து போராட்டம், நீட் தேர்வை ஒழிக்க வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதம், நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கம், தொகுதி மறுசீரமைப்பு, இந்தித் திணிப்பு, நிதி ஒதுக்குவதில் ஒன்றிய அரசின் பாரபட்சம் ஆகியவற்றைக் கண்டித்து தெருமுனைக்கூட்டங்கள் என்று மக்கள் பிரச்சினைகளுக்காகவும் கழக இளைஞர் அணி தொடர்ந்து களத்தில் நிற்கிறது என்றால், அதற்குக் காரணம், இளைஞர் அணியின் வலுவான கட்டமைப்பே!

மாநிலம், மாவட்டம், மாநகரம், பேரூர், ஒன்றியம், கிளை, வட்டம் என்று தமிழ்நாட்டின் எல்லாத் திசைகளிலும் வேர்விட்டிருக்கிறது கழக இளைஞர் அணி. வழக்கமான நிர்வாக அமைப்புடன் இந்த ஆண்டு இரண்டு புதிய முன்னெடுப்புகளையும் கழக இளைஞர் அணி மேற்கொண்டிருக்கிறது. இளைஞர் அணியின் சமூகவலைதளப் பக்கங்களை நிர்வகிப்பதற்கு என்று ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் சமூக வலைதளங்களுக்கான துணை அமைப்பாளர்களை நியமித்து வருகிறோம்.

### வலுவான கட்டமைப்பு!

ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர, பகுதி, பேரூர், வார்டுகளிலும் அனைத்துப் பாகங்களிலும் இளைஞர் அணிக்கு நிர்வாகிகளை நியமித்திருக்கிறோம். இப்படி, கழகத் தலைவர் வழிகாட்டலில், தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் இளைஞர் அணி நிர்வாகிகளைக் கொண்ட வலுவான அணியாக விளங்குகிறது கழக இளைஞர் அணி.

இப்படி, 5 லட்சம் நிர்வாகிகள், 50 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்று வலுவான கட்டமைப்பைக் கொண்டு செயல்படும் இளைஞர் அமைப்பு, இந்திய அளவில் தி.மு.க. இளைஞர் அணி மட்டுமே.

### 1.30 லட்சம் இளைஞர் அணி நிர்வாகிகள் பங்கேற்பு!

இப்படி, நியமிக்கப்பட்ட 5 லட்சம் நிர்வாகிகளை ஒன்றிணைத்து மண்டலம்தோறும் நிர்வாகிகள் சந்திப்பை நடத்த வேண்டும் என்ற கழகத் தலைவர் உத்தரவின்பேரில், முதற்கட்டமாக வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பை 14.12.2025, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணியளவில் திருவண்ணாமலை கலைஞர் திடலில் நடத்தவிருக்கிறோம்.

**1.30 லட்சம் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூடும் பிரமாண்ட நிகழ்ச்சியாக நடக்கவிருக்கும் இந்த ‘வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்’பில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் சிறப்புரை ஆற்றவிருக்கிறார் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

“வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவரே மீண்டும் முதலமைச்சர் ஆவார், திராவிட மாடல் ஆட்சி தொடரும் என்னும் வெற்றிச் செய்திக்கு அடித்தளமாக இந்த ‘இளைஞர் அணி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு’ அமையும் என்பது உறுதி.”

இவ்வாறு அவ்வறிக்கையில் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## மென்மேலும் பல வெற்றிப் படைப்புகளை அளித்து

# மக்களின் அன்போடும் ஆதரவோடும் - சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் வெற்றிக் கொடி தொடர்ந்து பறக்கட்டும்!

## பிறந்த நாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, டிச. 13–

'சூப்பர்ஸ்டார்' ரஜினிகாந்த் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், “மென்மேலும் பல வெற்றிப் படைப்புகளை அளித்து, மக்களின் அன்போடும் ஆதரவோடும் நடிகர் ரஜினிகாந்தின் வெற்றிக் கொடி தொடர்ந்து பறக்கட்டும்!” என்று வாழ்த்தியுள்ளார்.

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**ரஜினிகாந்த் வயதை வென்ற வசீகரம்!**

**மேடையில் ஏறினால் அனைவரையும் மகிழ்விக்கும் சொல்வன்மை!**

**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத கள்ளம் கபடமற்ற நெஞ்சம்!**

**ஆறிலிருந்து அறுபதுவரைக்கும் அரைநூற்றாண்டாகக் கவர்ந்திழுக்கும் என் நண்பர் 'சூப்பர்ஸ்டார்' ரஜினிகாந்த் அவர்களுக்கு உளம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**மென்மேலும் பல வெற்றிப் படைப்புகளை அளித்து, மக்களின் அன்போடும் ஆதரவோடும் தங்கள் வெற்றிக்கொடி தொடர்ந்து பறக்கட்டும்!**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.